பக்கங்கள் 24

காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2057 | வைகாசி 15 திங்கட்கிழமை 19.05.2025 | அதிர்வு 288





# விடுதலை கிடைக்கும் வரை தொடர்ந்தும் போராடுவோம்!

## தமிழின அழிப்பு நடந்தேறிய முள்ளிவாய்க்காலில் பிரகடனம்

“தமிழ்த் தேசிய நம்பிக்கையின் உறுதி கொண்டு ஒரு குடையின் கீழ் தமிழின அடக்கு முறைக்கு எதிராக - தமிழின விடுதலையை நோக்கி முனைப்புடன் மக்கள் பலத்துடன் தொடர்ந்தும் அடிபணியாது போராடுவோம்.”

04▶



# தமிழரசின் மீள் எழுச்சியுடன் அநுரவின் வீழ்ச்சி ஆரம்பம்

## பினான்ஸியல் டைம்ஸில் தயான் ஜயதிலக விவரிப்பு

“ஏ.கே.டி.(அநுர குமார திஸநாயக்க) – ஜே.வி.பி. – என்.பி.பி. (தேசிய மக்கள் சக்தி) ஆட்சிப் பீடத்தின் வீழ்ச்சியின் ஆரம்பம்” என்று தலைப்பிட்டு, மதிப்பார்ந்த “பினான்சியல் டைம்ஸ்“ பத்திரிகையில் கட்டுரை ஒன்றை வரைந்து உள்ள பிரபல

04▶






கிளிநொச்சி மாவட்டம், கரைச்சி பிரதேச சபை, பூநகரி பிரதேச சபை ஆகியவற்றின் தவிசாளர், பிரதித் தவிசாளர் நியமனங்கள் தொடர்பாக எழுந்த சர்ச்சை நேற்று முற்பகல் சுமுகமாகத் தீர்க்கப்பட்டது.

இலங்கைத் தமிழரசு கட்சியின் செயலாளராக சுமந்திரனை தாம் ஏற்றுக் கொள்ளவில்லை என யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தொலைக் காட்சி பேட்டி ஒன்றில் தெரிவித்தார் எனக் கூறப்படும் சர்ச்சையை அடுத்து, அந்த நியமனங்களுக்கான கடிதத்தில் தாம் ஒப்பமிட மாட்டார் என சுமந்திரன் நேற்று முன்தினம் கூட்டம் ஒன்றில் அறிவித்திருந்தார்.

திட்டமிட்டபடி, சுமந்திரன் இன்று அதிகாலை வெளிநாட்டுக்குப் பயணமானால் இவ்வாரம் முழுவதும் அவர் இலங்கையில் நிற்க மாட்டார்

05▶



# யாழ். பல்கலையில் உணர்வெழுச்சியுடன் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி முன்பாக உணர்வெழுச்சியுடன் அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தினமான நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இந்த நிகழ்வில் பல்கலைக்கழக மாணவர்கள், பேராசிரியர்கள் , விரிவுரையாளர்கள், கல்வி சார் - சாரா ஊழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு சுடரேற்றி, மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.





# கிளிநொச்சியில் தமிழினப் படுகொலை நினைவேந்தல்

தமிழினப் படுகொலை நினைவேந்தலும் சர்வமதப் பிரார்த்தனையும் கிளிநொச்சி பசுமைப்பூங்கா வளாகத்தில் நேற்று மாலை நடைபெற்றது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளையின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.















# கொழும்பில் துப்பாக்கிச் சூடு! ஒருவர் வைத்தியசாலையில்!!

கொழும்பு 13, புளூமெண்டல் வீதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

38 வயதுடைய நபரே காயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### விடுதலை கிடைக்கும்வரை...

– இவ்வாறு முள்ளிவாய்க்கால் முற்றத்தில் நேற்று நடைபெற்ற தமிழின அழிப்பின் 16 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வில் வெளியிடப்பட்ட பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தப் பிரகடனத்தின் முக்கிய அம்சங்கள் வருமாறு:–

"தமிழின அழிப்பு, வரலாற்று செயன்முறையூடு முள்ளிவாய்க்காலில் உச்சந்தொட்டு இன்றுடன் 16 ஆண்டுகள் நிறைவடைகின்றன.

சிங்கள – பௌத்த பேரினவாதம் இந்தத் தீவின் சக தேசமான தமிழர்களை அழிக்கவும் அடக்கியாளவும் வெற்றி கொள்ளவும் கடந்த எண்பது ஆண்டுகளுக்கும் மேலாக திட்டமிட்ட வகையில் செய்துவரும் கட்டமைக்கப்பட்ட இன அழிப்பின் காரணமாக தமிழ்த் தேசம் படிப்படியாக அழிந்து வருகின்றது.

இன அழிப்பு எதார்த்தத்தின் விளைவாக எமது இருப்பைப் பாதுகாப்பதற்கும், உரிமைகளைப் பெறுவதற்குமாக எழுந்த அசாத்தியமானதும், ஈகங்கள் நிறைந்ததுமான உரிமைப் போராட்டத்தினதும் விடியலுக்காக ஒரு தேசமாக நாங்கள் அணி திரண்டு நின்றதற்கானதுமான அடையாளமாகவும் உள்ள முள்ளிவாய்க்காலையும் நாம் இன்று நினைவு கூருகின்றோம்.

தமிழின அழிப்பில் பிரித்தானிய காலனித்துவத்தின் வகிபங்கு மிக முக்கியத்துவம் வாய்ந்தது. பிரித்தானிய காலனித்துவத்திடம் பரிசாகக் கிடைத்த ஒற்றையாட்சி அரசியல் கட்டமைப்பை, தமிழின அழிப்புக்கான ஒரு கருவியாக சிங்கள – பௌத்த பேரினவாதம் இலங்கை சுதந்திரத்தின் பின்னான அரசியல் வரலாற்றில் பயன்படுத்தியது.

2009 இற்கு முன்னர் தமிழர் தாயகத்தை அபகரிக்கரிப்பதற்கு இராணுவ வன்வலுவைப் பயன்படுத்திய – கொழும்பு அதிகார மையத்தை கையகப்படுத்திய அரசுகள், 2009 இற்குப் பின்னர், பௌத்த மதத்தையும் அபிவிருத்தியையும் மென்வலுவாகப் பயன்படுத்தி தமிழர் மீதான அடக்குமுறையையும் , தமிழரின் பூர்வீகத் தாயகப் பரப்பான வடக்கு – கிழக்கையும் தொடர்ந்தும் கட்டமைக்கப்பட்ட தமிழின அழிப்புக்கு ஊடாக அபகரித்து வருவதும் தமிழர் தாயகத்தை சிங்கள – பௌத்த மயமாக்குவதும் எம் கண்முன்னே நடந்தேறிக் கொண்டிருக்கின்றன.

21ஆம் நூற்றாண்டில் ஏக துருவ உலக ஒழுங்குக்கான போட்டி பலமுனைகளில் நடைபெற்றுக்கொண்டிருப்பதை அவதானிக்கும்போது, ஏக துருவ பேரரசு கட்டமைப்பு, தனது புவிசார் நலன்களுக்காக எந்த விலையையும் கொடுக்க தயாராக வுள்ளதை, அன்று முள்ளிவாய்க்காலும், இன்று பலஸ்தீனமும் வெளிக்கொண்டு வருகின்றன.

தற்போது அதிகாரத்திலுள்ள அரசு, தமிழினத்தின் நில மீட்பை மையப்படுத்திய விடுதலைப் போராட்டத்தை, இனவாதமாகச் சித்திகரிக்க முயற்சிக்கின்றது. இனவாதமாகச் சித்தரிப்பதன் மூலம் அதை உள்ளூர் பிரச்சினையாகச் சோடித்து, ஈழத்து தமிழர்களின் தேசத்துக்கான அரசியல் வேணவாவையும், அரசியல் அறக் கோரிக்கைகளையும் இல்லாதொழித்து, இலங்கையைச்சிங்கள–பௌத்த ஏக அடையாளத்துடன் கட்டமைக்க முனைவது, இந்தத் தீவின் பல்லினத் தன்மையைச் சாகடிப்பதாகும்.

தமிழின அழிப்பு குற்றத்தை மலினப்படுத்துகின்ற செயன்முறையில் ஈடுபடும் தமிழ் அரசியல் கட்சிகளின் நடவடிக்கைகள் கண்டனத்துக்குரியவை மட்டுமல்ல, அவை தமிழின விடுதலைப் போராட்டத்தின் திசையை மாற்றுவதோடு, இலங்கை அரசுக்கும் உலக வல்லாதிக்க சக்திகளுக்கும் விலை போனதாக வரலாறு அவர்களை நினைவு கொள்ளும்.

தற்போது ஆட்சி அமைத்த அநுர அரசு, தமிழினத்தின் கூட்டு அரசியல் வேணாவை புறந்தள்ளி வருவதோடல்லாமல், தமிழ்த் தேசியத்தின் விழுமியங்கள் மீதான நம்பிக்கையையும் உடைத்து வருகின்றது.

அதை ஒரு போர் முறையாக முன்னெடுக்கின்றது. தமிழ்த் தேசியத்தின் நம்பிக்கை விழுமியங்களை தற்போதைய உலக ஒழுங்குக்குப் பொருத்தப்பாடற்றதாகக் கட்டமைத்து, தமிழினத்தின் கூட்டு அரசியல் நம்பிக்கை மீதான உளவியல் போரை கட்டவிழ்த்துள்ளதை அவதானிக்க முடிகின்றது.

முள்ளிவாய்க்கால் ஈழத் தமிழின எழுச்சியின் அடையாளம். தமிழின அழிப்பை முள்ளிவாய்க்கால் திடலில் நினைவு கூர்வது மீண்டும் எம்மினத்தின் எழுச்சியைச் சுட்டி நிற்கின்றது. ஈழத்தமிழ் இனமாக சிங்கள அரசின் அடக்குமுறைக்கு எதிராகவும், சிங்கள ஒற்றையாட்சி அரசியல் அலகை தனது புவிசார் நலன்களுக்காகத் தக்க வைத்துக்கொண்டிருக்கும் ஏகாதிபத்திய பேரரசு கட்டமைப்பின் அடக்குமுறைக்கு எதிராகவும் போராட அணிதிரள்வதைத் தவிர வேறு எவ்வித தெரிவும் எமக்கு முன் வைக்கப்படவில்லை." – என்றுள்ளது.

### தமிழரசின்...

அரசியல் விமர்சகர் தயான் ஜயதிலக, "இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மீள் எழுச்சியுடன் அந்த வீழ்ச்சி ஆரம்பித்திருக்கின்றது" என்று கட்டுரையில் உப தலைப்பிட்டிருக்கின்றார்.

நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் நல்லூர் இளம் கலைஞர் மண்டபத்–தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உள்ளூராட்சி மன்ற வேட்பாளர்கள் மத்தியில் உரையாற்றிய கட்சியின் பதில் பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் இந்தக் கட்டுரை பற்றிய விடயத்தை அங்கு தமது உரையில் குறிப்பிட்டார்.

இவ்விடயத்தை ஒட்டி அவர் குறிப்பிட்ட விவரங்கள் வருமாறு:–

"இன்று (சனிக்கிழமை) கொழும்பில் இருந்து வெளியாகின்ற – மிக நன் மதிப்பார்ந்த – 'பினான்சியல் டைம்ஸ்' என்ற பத்திரிகையில் – அது பரவலாக விநியோகிக்கப்படுவதில்லை, ஆனால் முக்கியஸ்தர்கள் வாங்கி படிக்கின்ற பிரபலமான பத்திரிகையில் – தெளிவாக "இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மீள் எழுகை" என்று ஒரு உப தலைப்பிட்டு அரசியல் கட்டுரையாளர் தயான் ஜயதிலக எழுதிய கட்டுரை பிரசுரமாகியுள்ளது.

அந்தக் கட்டுரையின் தலைப்பு ஏ.கே.டி. அரசின் வீழ்ச்சியின் ஆரம்பம் என்பதாகும். The end of the beginning of AKD - JVP - NPP rule. அதில் அவர் மிகத் தெளிவாகச் சொல்லுகின்ற ஒரு விடயம், இதை ஆரம்பித்து வைத்தது இலங்கைத் தமிழரசு கட்சி என்பதுதான்.

இம்மாதம் ஆறாம் திகதி உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிந்து ஏழாம் திகதி அதிகாலை 4 மணிக்கு அவர் எனக்கு ஒரு குறுஞ்செய்தி வாழ்த்து அனுப்பியிருந்தார்.

"இறுமாப்பாகப் பேசுகின்ற இந்த ஆட்சியாளர்களிடமிருந்து எங்களை மீட்டெடுக்கின்ற பணியை நீங்கள் (தமிழரசுக் கட்சி) ஆரம்பித்து இருக்கின்றீர்கள்" என்று வாழ்த்துச் செய்தியை தொடர்ந்து அவர் அனுப்பியிருந்தார். அதற்கு நன்றி என்றும் தெரிவித்திருந்தார்.

இந்த வாழ்த்துகள் அங்கிருந்து வருவதற்கு முக்கிய காரணம் உண்டு. எங்களுக்குள்ளேயே இந்த வெற்றியின் முக்கியத்துவத்தை நாங்கள் புரியாமல் – அறியாமல் இருக்கலாம். ஆனால், வெளியில் இருந்து பார்ப்பவருக்கு மிக முக்கியமான ஒரு திருப்புமுனை தேர்தல் இது என்பது தெரிகின்றது.

தயான் ஜயதிலக, எங்களின் ஓர் அன்பர் அல்லர். எங்களைச் சிலாகித்து பேசுகின்றவரும் அல்லர். எங்களுடைய கொள்கையோடு இணைந்து போகின்றவரும் அல்லர்.

ஆனால், இந்தத் தேர்தல் முடிவு நாட்டில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்துகின்றது. நாட்டில் அந்த மாற்றத்தை ஏற்படுத்துகின்ற நடவடிக்கையை முன் நின்று செயற்படுத்துவது தமிழரசுக் கட்சி என்று அவர் வாழ்த்தியிருக்கின்றார். இந்த வாழ்த்துகள் உங்கள் ஒவ்வொருவருக்கும் உரியது." – என்று கூட்டத்தில் பங்குபற்றிய உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் போட்டியிட்ட தமது கட்சி வேட்பாளர்களைப் பார்த்துக் கூறினார் சுமந்திரன்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சி

**இரகசியம் பரகசியம்...**

என்ற பின்புலத்தில், அதற்கு முன்னர் இவ்விடயத்தைத் தீர்ப்பதற்கான முயற்சிகள் நேற்றுக் காலையே நேரத்துடன் இடம்பெற்றன எனத் தெரிகின்றது.

கட்சியின் கிளிநொச்சி மாவட்டச் செயலாளர், மேற்படி பிரதேச சபைகளுக்கு கட்சியின் மாவட்டக் கிளையினால் பரிந்துரைக்கப்பட்ட தவிசாளர்கள் போன்றோருக்கும் சுமந்திரனுக்கும் இடையில் நேற்றுக் காலையில் தொலைபேசி ஊடாக நடைபெற்ற உரையாடல்களைத் தொடர்ந்து, சம்பந்தப்பட்ட கடிதங்களை ஒப்பமிட்டுத் தேர்தல் ஆணையத்துக்கு மூலப் பிரதியை ஒப்படைக்கும் நடவடிக்கையை சுமந்திரன் முன்னெடுத்தார் என அறிய வந்தது.

கட்சிப் பொதுச் செயலாளராகச் சுமந்திரனை ஏற்கவில்லை என்று மேற்படி சபைகளுக்கு தவிசாளர்களாகப் பெயர் பிரேரிக்கப்பட்டவர்களோ அல்லது கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளையின் செயலாளரோ தெரிவிக்காத நிலையில், அவர்களைப் பாதிக்கும் விதத்தில் இத்தகைய நடவடிக்கை எடுப்பது பொருத்தமற்றது என சுமந்திரனுக்கு தெரிவிக்கப்பட்டமையை அடுத்து, அவர் சம்பந்தப்பட்ட கடிதங்களை தேர்தல் ஆணையத்துக்கு ஒப்பமிட்டு அனுப்ப இணங்கினார் எனத் தெரியவந்தது.

நேற்று முற்பகல் வெள்ளவத்தையில் இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் பங்குபற்றிய பின்னர் அவர் தேர்தல் ஆணையத்துடன் தொடர்பு கொண்டார். நேற்று ஞாயிற்றுக்கிழமை என்றாலும் தேர்தல் விடயங்களை ஒட்டி தேர்தல் திணைக்களம் பணியாற்றுவதாகத் தெரிவிக்கப்பட்டது. அதனை அடுத்து நண்பகல் 12.30 மணி அளவில் கொழும்பு ராஜகிரியவில் உள்ள தேர்தல் ஆணைய அலுவலகத்திற்குச் சென்ற சுமந்திரன், அங்கு சம்பந்தப்பட்ட ஐந்து பிரதேச சபைகளின் தவிசாளர்கள், பிரதி தவிசாளர்கள் நியமனங்கள் தொடர்பான கடிதங்களை உதவித் தேர்தல் ஆணையாளர் அச்சுதனிடம் நேரடியாகக் கையளித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கோரளைபற்று மேற்கு, மண்முனை மேற்கு, கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி, பூநகரி மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுகுடியிருப்பு ஆகிய பிரதேச சபைகளுக்கான தவிசாளர்கள், பிரதி தவிசாளர்கள் நியமனங்கள் தொடர்பான கடிதங்களே நேற்று மதியம் தேர்தல் ஆணையத்தில் நேரடியாக சுமந்திரனால் கையளிக்கப்பட்டன.

திருகோணமலை மாவட்டம் வெருகல் பிரதேச சபை தொடர்பான தவிசாளர், பிரதி தவிசாளர் நியமனக் கடிதங்கள் ஏற்கனவே தேர்தல் ஆணையத்துக்கு அனுப்பப்பட்டு விட்டன எனத் தெரிய வந்தது.

கரைச்சி மற்றும் பூநகரி பிரதேச சபைகளுக்கான தவிசாளர் பிரதி தவிசாளர் நியமனங்கள் தொடர்பாக தமிழரசு கட்சிச் செயலாளர் சுமந்திரன் ஒப்பமிட்ட கடிதங்களின் பிரதிகள் whatsapp மூலம் தேர்தல் ஆணையத்துக்குக் கிடைத்ததா என்று நேற்றுக் காலையில் கிளிநொச்சியிலிருந்து சில தரப்புகளினால் விசாரிக்கப்பட்டதாகவும், அப்படிக் கடிதம் ஏதும் கிடைக்கவில்லை என தேர்தல் திணைக்களத்தில் இருந்து பதில் அளிக்கப்பட்டதாகவும் தெரிய வந்தது.

தமிழரசுக் கட்சியின் சார்பில் சம்பந்தப்பட்ட பிரதேச சபைகளின் தவிசாளர்கள், பிரதி தவிசாளர்களாகப் பெயர் பிரேரிக்கப்பட்டு நியமனம் பெற வேண்டியவர்கள், தமது பொதுச் செயலாளர் பதவி தொடர்பில் ஆட்சேபனையோ, எதிர்ப்போ, சவாலோ கிளப்பவில்லை என்பது அவர்களாலேயே தமக்குச் சுட்டிக் காட்டப்பட்ட நிலையில், அவர்களைப் பாதிக்கும் விதத்தில், தீர்மானம் எடுக்கக் கூடாது என்ற நியாயத்தின் அடிப்படையில், தமது முடிவை மாற்றி, அந்தக் கடிதங்களை தேர்தல் ஆணையத்திடம் தான் ஒப்படைத்தார் என இன்று விடிகாலையில் வெளிநாட்டுக்குப் புறப்பட முன்னர் சுமந்திரன் தெரிவித்தார்.

* * *

நேற்றுமுன்தினம் முற்பகல் யாழ்ப்பாணம், நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தமது உரைக்கு இடையே சுமந்திரன் 'சாராயபவன்' பற்றிக் குறிப்பிட்டார் என்று நேற்று என் பத்தியில் கோடி காட்டி இருந்தேன்.




வட்டுக்கோட்டையில் தமிழரசுக் கட்சி வாக்குகளைப் பெறுவதற்காக சாராயப் போத்தல்கள் விநியோகித்ததாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் பகிரங்க மேடை ஒன்றில் கூறிய விடயத்தை ஒட்டி சுமந்திரனின் இந்தப் பேச்சு அமைந்தது. அந்த உரைக்காக அவரிடம் 100 கோடி ரூபா நஷ்ட ஈடு கேட்டு வட்டுக்கோட்டைக் கிளையின் பிரமுகர் ஜெயந்தன் சட்டத்தரணி நோட்டீஸ் அனுப்பிய பின்னணியில, இந்த விடயத்தை சுமந்திரன் தமது பேச்சில் குறிப்பிட்டிருக்கின்றார். அவர் பேச்சு அவரின் சொற்களில் வருமாறு:-

"1970 ஆம் ஆண்டுகளில் எங்களுடைய கட்சியில் ஒரு தீர்மானம் இருந்தது. கட்சி உறுப்பினர்கள் ஒருவரும் மது அருந்தக் கூடாது, கட்சி உறுப்பினர்கள் ஒருவரும் சிகரெட் பிடிக்கக் கூடாது என்பது அந்தத் தீர்மானம்.

"அந்த நாள்களில், சிகரெட் பிடிப்பது பெரிய பிழை என்று கருதப்படாத காலம். ஆனால், எங்களுடைய எம்.பிமார் சில பேர் கட்சித் தீர்மானத்தினால் என்ன செய்வதென்று தெரியாது, சுருட்டுக் குடிக்கத் தொடங்கினர். உண்மை. ஆலால சுந்தரம் சுருட்டுக் குடிக்கத் தொடங்கியது இதனாலேதான். ஏனென்றால் கட்சித் தீர்மானம், சிகரெட் குடிக்கக் கூடாது. அந்த அளவுக்கு கட்சிக் கட்டுப்பாடு இருந்தது. எங்கள் கட்சிக்குள்ளே அப்போதிருந்து இருந்தது.

"அட, இந்தக் கட்சியைப் பார்த்த சொன்னார் சாராயம் விநியோகித்ததென்று? அவர்களுக்கு அதெல்லாம் ஒரு சகஜமான விஷயமாக இருக்கலாம். சாராயபவனுக்கு அது சகஜமான விஷயமாக இருக்கலாம்.

"ஏனென்றால், இங்கே எங்கே ஆலங்குழாய் கஜன் இருக்கின்றாரா? அவர் இன்று எழுதியிருக்கின்றார், சில வருஷங்களுக்கு முன் நடந்த விடயங்களைச் சொல்லியிருக்கின்றார்.

"அவரோட (சாராயபவனுடைய) வீட்டில அவர் ஊத்திக்கொடுத்த நேரம், அமைச்சர்களுக்கு ஊத்திக்கொடுத்த நேரம், கஜன் அவரிடம் கேள்வி கேட்டார். இந்தக் கட்டுக்கோப்பான கட்சியிலே ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் மது ஊத்திக் கொடுக்கலாமா என்று. அப்படி கேட்டதற்கு இவருக்கெதிராக (கஜனுக்கு எதிராக) அவர் முறைப்பாடு செய்தார். கட்சிக்கும் முறைப்பாடு. அவருடைய வேலைத் தளத்திற்கும் முறைப்பாடு. இவரை (கஜனை) வேலையில இருந்து நீக்குங்கோ என்று. அப்படி எழுதியவர்தான் இன்று எங்களுக்கு இந்தக் கதை சொல்ல வெளிக்கிட்டிருக்கின்றார். மானிப்பாய் தொகுதிக் கிளை ஒரு தீர்மானம் எடுத்து அனுப்பியது. அந்த நேரம், ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டுமாக இருந்தால் அது கஜனுக்கெதிராக எடுக்கக் கூடாது, சரவணபவனுக்கு எதிராகத்தான் எடுக்க வேண்டும் என்று. மானிப்பாய் தொகுதிக் கிளை அப்படி ஒரு தீர்மானம் எடுத்ததா இல்லையா? எடுத்தது.

"அந்த சாராயபவனுக்கு இன்று வந்திருக்கும் திமிரைப் பாருங்கோ. தான் தலைவராக இருந்த தொகுதிக் கிளையையே சுட்டிக்காட்டி இப்படிப் பேசுகிறார். ஜெயந்தன், 100 கோடி (ரூபா) கிடைக்க இருக்கு. அதை அப்படியே கட்சிக்குத் தாருங்கள், கட்சியில் காசில்லை."- இப்படிக் குறிப்பிட்டு இருக்கிறார் சுமந்திரன்.




# லண்டனில் நேற்று கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம்

தமிழின இனவழிப்புக்கு எதிராக சர்வ தேச மற்றும் பிரித்தானிய அரசுகளிடம் இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக நடவடிக்கை எடுக்கக் கோரி பல்லாயிரக்கணக்கான மக்கள் பங்கேற்ற மே-18 இனவழிப்பு நினைவுதின நிகழ்வும் கண்டன மற்றும் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டப் பேரணியும் பிரித்தானிய தலைநகர் லண்டனில் நாடாளுமன்ற சதுக்கம் மற்றும் பிரதமர் உத்தியோகபூர்வ இல்லத்தின் (10 டவுனிங் தெரு) முன் நேற்றுப் பிற்பகல் 2 மணி முதல் இடம்பெற்றன.

பிரித்தானியா தமிழர் ஒருங்கிணைப்புக் குழு மற்றும் ஐக்கிய இராச்சியம் தமிழ் இளையோர் அமைப்பு என்பன இணைந்து இதற்கான ஏற்பாட்டைச் செய்தன.

இவற்றில் பேர்மிங்ஹம் இளையோர் ஒருங்கிணைப்பாளர் பார்த்தீபன் குணரத்தினம், பிரசாந்த் தவராசா, குகமூர்த்தி குகதாசன் உட்படப் பலர் முன்னின்று பங்களித்தார்கள். பிரித்தானியாவின் பல் வேறுபட்ட பகுதிகளில் இருந்தும் புலம்பெயர் தமிழ் மக்கள் நீதி கோரி இந்த நிகழ்வுகளில் உணர்வுடன் கலந்து கொண்டனர்.















# மின்கட்டண திருத்த யோசனை; பொதுமக்கள் கருத்து கோரல்

மின்கட்டண திருத்தம் தொடர்பில் இலங்கை மின்சார சபை முன்வைத்த பரிந்துரையை பரிசீலனை செய்துவருவதாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதற்கமைய பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் தயாரிக்கப்படும் மாற்றுப் பரிந்துரை தொடர்பான பொதுமக்களின் கருத்துக் கோரும் நடவடிக்கை நாளை ஆரம்பமாகவுள்ளது. 9 மாகாணங்களையும் உள்ளடக்கி 23 ஆம் திகதி முதல் வாய்மொழியாகவும் எழுத்துப்பூர்வமாகவும் பொதுமக்களின் கருத்துக்கள் கோரப்படும்.

அனைத்து பரிந்துரைகள் மற்றும் கருத்துக்களையும் பரிசீலித்த பின்னர் இறுதி முடிவு அறிவிக்கப்படுமென பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்தது.

மின் கட்டண திருத்தம் தொடர்பான இறுதி தீர்மானம் ஜூன் முதலாவது அல்லது இரண்டாவது வாரத்தில் அறிவிக்கப்படுமெனவும் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

மின்சாரக் கட்டணத் திருத்தம் தொடர்பான இலங்கை மின்சார சபையின் முன்மொழிவு நேற்று முன்தினம் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

மின்சாரக் கட்டணத்தை 18.3 வீதத்தால் அதிகரிக்க இலங்கை மின்சார சபையினால் முன்மொழியப்பட்டுள்ளது.



# நீரில் மூழ்கும் 20 இடங்கள் கொழும்பில் அடையாளம்

அதிக மழையினால் கொழும்பு மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் நீரில் மூழ்கும் 20 இற்கும் அதிகமான இடங்கள் அடையாளங்காணப்பட்டுள்ளன.

ஆமர்வீதி மற்றும் மற்றும் மருதானை டீன்ஸ் மாவத்தையை அண்மித்த பகுதிகள் அதிகளவில் நீரில் மூழ்குவதாக கொழும்பு மாநகர சபை தெரிவித்தது.

நீரை அகற்றுவதற்கான வடிகாண் கட்டமைப்பை அண்மித்து நிர்மாணிக்கப்பட்டுள்ள சட்டவிரோத கட்டுமானங்களே இந்த நிலைமைக்கான காரணமென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தற்போது அடையாளம் காணப்பட்டுள்ள இடங்களை சீர்செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என கொழும்பு மாநகர சபை மேலும் தெரிவித்துள்ளது.

# நாடாளுமன்ற வளாகத்தைச் சுற்றி இன்று விசேட போக்குவரத்துத் திட்டம்

பத்தரமுல்ல நாடாளுமன்ற வளாகத்திலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் இன்று மாலை விசேட போக்குவரத்துத் திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளதாக பொலிஸ் தெரிவித்துள்ளது.



16 ஆவது இராணுவ நினைவு தின தேசிய நிகழ்ச்சியை முன்னிட்டு இந்த விசேட போக்குவரத்துத் திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

இந்த பகுதியில் வாகனம் செலுத்துவோரை மாற்று வழிகளைப் பயன்படுத்துமாறு பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.




# ஜூன் 01 முதல் மின்சாரக் கட்டணங்களை அதிகரிக்க எதிர்பார்ப்பு; இலங்கை மின்சார சபை

இந்த ஆண்டின் பிற்பகுதிக்கான மின்சார கட்டண திருத்தத்தின்படி மின்சாரக் கட்டணங்கள் அதிகரிக்கப்படும் என்றும் ஆனால் இந்த ஆண்டின் தொடக்கத்தில் இருந்த மின்சாரக் கட்டணங்களை விட அது குறைவாக இருக்கும் எனவும் இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

முன்மொழியப்பட்ட திருத்தத்துக் கமைய, இந்த வருடத்தின் ஆரம்பத்தில் இருந்ததை விட மின்சார கட்டணம் சுமார் 5.4 சதவீதம் குறைவடையும் என இலங்கை மின்சார சபை அறிக்கையொன்றை வெளியிட்டு தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டின் முதல் அரையாண்டில், மின்சார நுகர்வோருக்கு நிவாரணமாக மின்சாரக் கட்டணங்களில் 20 சதவீதக் குறைப்பு மேற்கொள்ளப்பட்டதுடன், இதன் விளைவாக, ஒரு அலகு மின்சாரத்தின் சராசரி கட்டணம் 24 ரூபா வரை குறைவடைந்தது.

எதிர்வரும் ஜூன் முதலாம் திகதி முதல் மின்சாரக் கட்டணங்களை 18.3 சதவீதம் அதிகரிக்க வேண்டும் என இலங்கை மின்சார சபை நேற்றுமுன்தினம் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு முன்மொழிந்திருந்தது.

கடந்த ஜனவரியில் மேற்கொள்ளப்பட்ட மின்சார கட்டணக் குறைப்பின் தாக்கம் உட்பட, ஆணைக்குழுவுக்கு 8 ஆயிரம் மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான இழப்பு ஏற்பட்டுள்ளதாகப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியது.

அத்துடன், அண்மையில் சர்வதேச நாணய நிதியம், செலவுகளை ஈடுகட்ட மின்சாரக் கட்டணங்களை உடனடியாக மறுசீரமைக்க வேண்டும் என பரிந்துரைத்தது.

இந்தப் பின்னணியில்தான், மின்சாரக் கட்டணங்களை 18.3 சதவீதம் அதிகரிப்பதற்கு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

# மது போதையில் விழுந்து இளைஞர் ஒருவர் உயிரிழப்பு

(எஸ்.ரகுதீஸ்)

ஐஸ் போதைப் பொருளுக்கு அடிமையான இளைஞர் ஒருவர் மது போதையில் சேற்றில் விழுந்து உயிரிழந்துள்ளார்.

கே.கே.எஸ். வீதி வண்ணார் பண்ணையைச் சேர்ந்த பாலச்சந்திரன் சசிராஜ் (வயது 29) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மேற்படி இளைஞரின் வீட்டார் மட்டக்களப்புக்கு சென்ற நிலையில் சகோதரன் ஒருவர் மட்டும் வீட்டில் இருந்துள்ளார். இந் நிலையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை (17) வீட்டில் மது விருந்து நடைபெற்று முடிந்த நிலையில் வெளியில் சென்ற இளைஞர் சேற்றில் விழுந்து உயிரிழந்தார்.



இந்த மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார். சாட்சிகளை யாழ்ப்பாண பொலிஸார் நெறிப்படுத்தினர்.

இறப்பிற்கான காரணம் கண்டறிய உடற்கூற்று மாதிரிகள் பகுப்பாய்வுக்காக கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளன.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# கனடாவின் உறுதியான நிலை

இலங்கையில் தமிழின அழிப்பில் உயிர் நீத்தவர்களை நினைவு கூரும் வகையில் கனடாவில் தமிழின அழிப்பு நினைவகம் பிரம்டன் நகரில் கடந்த 10 ஆம் திகது சனிக்கிழமை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. அதனால் சீற்றமடைந்த இலங்கை அரசு, இலங்கையில் உள்ள கனடாவின் தூதுவரை வெளிவிவகார அமைச்சுக்கு அழைத்து தனது ஆட்சேபனையைத் தெரிவித்தது.

கனடாவின் இந்த நடவடிக்கையை ஒட்டி கொழும்பில் சில ஊடகங்கள் - குறிப்பாக சிங்கள, ஆங்கில ஊடகங்கள் - சில தவறான அர்த்தப்படுத்தல்களை வெளியிட்டு வருகின்றன.

இலங்கையில் இன அழிப்பு இடம் பெற்றதாக தெரிவித்து நினைவகம் ஒன்றை கனடாவில் உள்ள நகராட்சி மன்றம் ஒன்றே தன்னுடைய அரசியல் இலக்குக்காக அமைத்திருக்கின்றது. அது கனடாவில் மத்திய அரசின் தீர்மானத்தில்அமைக்கப்பட்டதல்ல.ஒருநகரத்தின் உள்ளூராட்சி மன்றத்தின் நடவடிக்கை மட்டுமே என அந்த ஊடகங்கள் சமாதானம் கூறுகின்றன.

கனடாவின் மத்திய அரசு 2006 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளைப் பயங்கரவாத அமைப்பாக அறிவித்தது, 2014 ஆம் ஆண்டு அதனை மீண்டும் உறுதிப்படுத்தியது என்று கூறும் அந்த ஊடகங்கள், கனடா மத்திய அரசின் நிலைப்பாடு இலங்கையில் இனவழிப்பு இடம் பெற்றது என்பது அல்ல என்றும் சமாதானம் கூற முனைகின்றன. அனால் அது முற்றிலும் தவறு.

கனடாவில்புலிகள்மீதானதடைவிதிப்பும் அது தொடர்வதும் வேறு விடயங்கள். ஆனால் கனடாவின் மத்திய அரசு இலங்கையில் இன அழிப்பு இடம்பெற்றது என்பதை தெளிவாகவும் திட்டவட்டமாகவும் திரும்பத் திரும்பக் கூறி வருகின்றது என்பதை கொழும்பின் சிங்கள, ஆங்கில ஊடகங்களும் ஆட்சிப் பீடமும் மறந்து விடக்கூடாது. அதை மறைத்து செய்திகளை முன் வைக்கவும் கூடாது.

கனடாவின் டொரன்டோ மாகாணம் இலங்கையின் இன அழிப்பு வாரத்தை சட்ட ரீதியாகப் பிரகடனப்படுத்தியுள்ளது.

கனடாவில் இதுவரை 9 ஆண்டுகளுக்கு மேல் பிரதமராக இருந்த ஜஸ்டின் ட்ரூடோவும், இப்போது பிரதமராக இருக்கும் மார்க் கார்னியும் கூட இலங்கையில் இடம் பெற்றது இனப்படுகொலைதான் - இன வழிப்புதான் - என உறுதியாகக் குறிப்பிட்டுள்ளனர்.

இலங்கையின் முள்ளிவாய்க்கால் பேரவலத்தை ஒட்டி தற்போதைய பிரதமர் மார்க் கார்னி இப்போது வெளியிட்டுள்ள அறிக்கை அதைத் தெளிவுபடுத்தி உள்ளது.

இலங்கையில் பொறுப்புக் கூறலுக்கும் உண்மை, நீதி ஆகியவற்றை அடைவதற்கும் எடுக்கப்படும் சுதந்திரமான சர்வதேச முயற்சிகளை கனடா தொடர்ந்தும் ஆதரிக்கிறது என பிரதமர் மார்க் கார்னி, தமிழ் இனப்படுகொலை நினைவேந்தலை முன்னிட்டு தாம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

"இலங்கையில் ஆயுதப்போர் முடிவடைந்து இன்றுடன் 16 வருடங்கள் ஆகிவிட்டன. 26 வருடங்களுக்கும் அதிகமாக நீடித்த இந்தப் போரில் பொதுமக்கள் கொல்லப்பட்டனர். இந்த தமிழ் இனப்படுகொலை நினைவேந்தல் நாளில், இழந்த உயிர்களையும் சிதறிப்போன குடும்பங்களையும் பேரழிவடைந்த சமூகங்களையும் இன்றுவரை காணாமல் ஆக்கப்பட்டவர்களாகவே இருப்போரையும் நாம் நினைவு கூருகின்றோம். அத்துடன் தமது அன்புக்குரியவர்களின் நினைவுகளைச் சுமக்கும் கனேடிய தமிழ்ச்சமூகத்தையும் கனடாவின் பல பகுதிகளிலும் திட்டமிடப்பட்டுள்ள நினைவேந்தல் நிகழ்வுகளையும் நாம் மனதிற் கொள்கின்றோம். பொறுப்புக்கூறலுக்கும் உண்மை, நீதி ஆகியவற்றை அடைவதற்கும் எடுக்கப்படும் சுதந்திரமான சர்வதேச முயற்சிகளைக் கனடா தொடர்ந்தும் ஆதரிக்கின்றது. இந்த நினைவேந்தல் நாளை நாம் கடைப்பிடிக்கும் போது, துணிவுடன் அஞ்சலி செலுத்துவதற்கான உறுதிப்பாட்டையும், நீடித்திருக்கும் அமைதிக்காகச் செயற்படுவதற்கான உறுதிப்பாட்டையும் அது பலப்படுத்தட்டும்" என்று குறிப்பிட்டுள்ளார்.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர்.

இலங்கையில் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்ட சரித்திரத்தின் ஆரம்பத்தில் - எண்பதுகள் வரை - தாயகத்தில் நின்று நம் இனத்துக்காகப் போராடிய புலமையாளர். விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பக் கட்டத்தில் தியாகி சிவகுமாரன், புலிகளின் தலைவர் பிரபாகரன் மற்றும் உமாமகேஸ்வரன், சுந்தரம் சிறிசபாரத்தினம், சித்தார்த்தன் முதல் டக்ளஸ் தேவானந்தா வரை மூத்த போராளித் தலைவர்கள் எல்லோரோடும் சட்டவாளராகவும், தமிழ் மக்களின் புனர்வாழ்வுப் பணிகளை ஒருங்கிணைக்கும் தொடர்பாளராகவும் நெருங்கிப் பழகியவர். தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மற்றும் தமிழர் தகவல் நிலையம் ஆகியவற்றின் பிதாமகர்களில் ஒருவர். இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடூரங்கள் குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட சன்சோனி கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பு வாதங்களையும் சான்றுகளையும் ஒருங்கிணைத்து நெறிப்படுத்தும் அனுசரணை சட்டத்தரணியாகச் செயற்பட்டவர். தற்போதைய நிகழ்வுகள் தொடர்பான அவரது பார்வை அவரது அனுபவங்களிலிருந்து தமிழ் மக்களின் புரிதலுக்காக இங்கு தொடராக வெளிவருகிறது.

ஆஸ்திரேலியாவில் புலம்பெயர் தமிழர்களின் சட்டநலன்களில் அதிக ஈடுபாட்டுடன் செயற்பட்டு வரும் அவர் முன்னர் 'காலைக்கதிர்' நாளிதழின் வாசகர்களால் நன்கு அறியப்பட்ட அரசியல் கட்டுரையாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

25

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?



விமல் வீரவன்ஸ - சோமவன்ஸ அமரசிங்க - ரில்வின் சில்வா

அநுரா ஜே.வி.பியின் கட்சித் தலைவராக ஜூலை 2014இல் நியமனம் பெறுவதற்கு முன், கட்சியில் சில பிளவுகள் ஏற்பட்டு, அங்கிருந்து சில அங்கத்தினர் வெளியேறும் நிலைகள் உருவாகின. மார்ச் 2008 இல் இருந்து அவர்களது பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸவுக்கு எதிராக மத்திய குழு ஒழுங்காற்று நடவடிக்கைகள் எடுத்து, கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் மஹிந்தவுக்கு வெற்றி தேடித் தந்து, பிள்ளையானை முதலமைச்சராகிய பின், மே 2008இல் விமல் வீரவன்ஸ கட்சியை விட்டு நீங்கி, புதிய கட்சியைத் தொடங்கினார். அந்த ஒழுக்காற்று நடவடிக்கைகள் விமல் வீரவன்ஸவினதும் அவரது மனைவியினதும் ஊழல்கள் பற்றியவை. அவை பற்றிய புலன் விசாரணைகள், நீதிமன்ற வழக்குகள் சம்பந்தப்பட்டவை. விமல் வீரவன்ஸ தான் மஹிந்தவுக்குப் பக்கபலமாக இருப்பதாலும், அவரது அணிக்குள் தனக்கு செல்வாக்கு நிறைய உண்டு என்ற ஆதங்கங்களும், கட்சி தனியே போட்டியிடுவதைத் தான் ஆதரிக்க மாட்டேன் என்பதால் பழிவாங்கல் எனவும் பேசினாலும், இந்த ஊழல்கள் பற்றி அவர் மத்திய குழுவுடன் விசாரணைக்கு ஒத்துக் கொள்ளவில்லை.

அடுத்தது மிகப் பேரிடியாக 20 வருடங்களுக்கு மேல் கட்சியின் தலைமையில் இருந்து அதனை வளர்த்த சோமவன்ஸ அமரசிங்க கருத்து வேற்றுமைகளால் ஜூலை 2014இல் பதவி விலககின்றார் என அறிவித்து, அநுராவைத் தலைவராக்கினார். ஆயினும் கட்சியின் பெருமளவு அங்கத்தினர்களின் கோரிக்கைகளில் மத்திய குழு உறுப்பினராக தொடர்ந்து பணியாற்ற ஒப்புக் கொண்டார். அவருடன் 2014 இல் பெரிதாக வளர்ந்த பிணக்குகள் அவரது பொருளாதாரத் திட்டத்தை ஒட்டியதும், கட்சி 2015 ஆம் ஆண்டு தேர்தலில் தனித்துப் போட்டியிட வேண்டும் என்பதும். கட்சியினது முனைப்பினால் போரை வெல்வதற்காக எல்லா சாத்தியக்கூறுகளையும் கட்சி மஹிந்தவுக்கு முன் நின்று செய்தமையால், தாங்கள் அவர்களுடன் சேர்ந்து பயணிப்பதில் பயன்பெறப் போவதில்லை

தொடர்ச்சி▼

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?



மஹிந்தவும் அநுரவும்

தொடர்ச்சி▲

என்பது அவர் வாதம். தாங்களாகவே ஆட்சி அமைக்கும் உத்திகளை இருக்கும் அரசியல் நிலைகளில்

பயன்படுத்திக் கொள்ள அவர் விரும்பினாலும், கட்சி தயக்கம் காட்டியமையால், மஹிந்தவே 2015 ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்கினார். அவரது தோல்வி, அவரது அரசாங்கத்திற்கு எதிரான சதி என ஜே.வி.பி. உடனடி நடவடிக்கைகளில் இறங்காததில் கட்சியுடன் குற்றம் கண்டு, மத்திய குழு உறுப்பிலிருந்தும், கட்சி அங்கத்துவத்திலிருந்தும் உடனடியாக இராஜினாமாச் செய்து, புதிய கட்சியை 48க்குந் மேலான கட்சி அங்கத்தினர்களுடனே தொடங்கினார் சோமவன்ஸ அமரசிங்க.

பொருளாதார அடிப்படையில் மார்க்ஸிய – சோசலிச தத்துவங்களில் இருந்து சற்று விலகி, தனிமனித முதலாளித்துவத்தை ஊக்குவிப்பதில்தான் பொருளாதார வளர்ச்சியை பெற முடியும் என்ற தத்துவத்தை முன்னெடுத்து, முன்னைய இடதுசாரி தத்துவங்கள் சோவியத் குழுமங்களிலும் சீனாவிலும் இருந்த திட்டங்களை அடிப்படையாகக் கொண்டவை, ஆனால், தற்சமயம் சர்வதேச பொருளாதாரம் மாற்றங்கள் கண்டு, சீனாவே தனி மனித பொருளாதாரத்தை ஊக்குவித்து, பாரிய வளர்ச்சி கண்டமையால், அந்தப் பாதைகளில் முன்னேறுதல் வேண்டும் என்பது சோமவன்ஸ அமரசிங்கவின் வாதம். ஆனால் கட்சியில் முன்னைய இடதுசாரிகளான சமசமாஜக் கட்சி (LSSP), கம்யூனிஸ்ட் கட்சி (CP) போன்றவை கொள்கைகளில் இருந்து நழுவி, சிறிமாவோ அரசுடன் சேர்ந்ததை மக்கள் நிராகரித்தமை போல, தங்களையும் கேலியாக்குவார்கள் எனத் தர்க்கம் செய்தனர். இந்தத் தர்க்கங்கள் கொள்கைப் பிரகடனங்களாக வரவில்லை.

ஆனால் அநுரா தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட போது ஒரு முக்கியமான செய்தியை நாட்டு மக்களுக்கு தந்தார். அது, தனது கட்சி 1971 இல் இருந்து 1991 வரையில் நடத்திய வன்முறைகளுக்காக மக்களிடம் மன்னிப்பு கோருகிறார் எனவும், இனித் தாங்கள் பதவிக்கு வருவதானால் மக்களின் நம்பிக்கையை வன்முறையற்ற வழிகளில் பெறுவதாலேயே அடைவோம் என்றும், இனி எப்பொழுதும் ஜே.வி.பி. எந்தச் சந்தர்ப்பத்திலும் வன்முறையைக் கையில் எடுக்காது என்பதை மக்களுக்கு அறிதியிட்டுச் சொல்கிறார் எனவும் கூறப்பட்டது. அந்த உரையில், தாங்கள் சிங்கள – பௌத்த மக்களின் விடுதலைக்கும் பாதுகாப்புக்கும் முதலாளித்துவத்திற்கும் எதிரான நிலைப்பாடுகளை எடுத்தமையால், வன்முறை தங்கள் மீது திணிக்கப்பட்டதால், அதிலிருந்து தங்களைப் பாதுகாக்க வேண்டி இருந்தது எனக் குறிப்பிட்டு, எதுவானாலும் தாங்கள் மேற்கொண்ட வன்முறைக்கு அவர் மன்னிப்புக் கோரினார். ஆனால் அந்த உரையில் தமிழ் மக்களுக்கு எதிராக நடந்த அடக்குமுறைகள், பின்னர் அவர்கள் மேல் நடத்தப்பட்ட பயங்கரவாதம், போர், முள்ளிவாய்க்கால் அவலங்களை பற்றி, அவற்றுக்குத் தாம் துணை போனோம் என்று இல்லாவிட்டாலும், மக்களின் வலிகளுக்காக மன்னிப்பு கோராவிடினும், தங்களது கட்சி அதையிட்டு மக்களின் அவஸ்தைகளுக்காக மனம் வருந்துகிறது என்று கூட எதுவும் தெரிவிக்கவில்லை.

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் ஜே.வி.பி. கூட்டில் இருந்த போது, சந்திரிகாவுக்கு நெருக்கடி கொடுத்து, மஹிந்தவுக்கு ஜனாதிபதி வேட்பாளர் நியமனம் பெற்றுத் தருவதற்கு ஆதரவளிக்க, அவருக்கு மூன்று முக்கிய நிபந்தனைகளை வைத்திருந்தனர்.

முதலாவது – விடுதலைப் புலிகளுடன் சந்திரிகா இணங்கி கொண்ட சுனாமி நிதி கட்டமைப்பு மீளப் பெறப்பட வேண்டும்.

இரண்டாவது – நடப்பில் இருக்கும் போர் நிறுத்த ஒப்பந்தம் மீளாராயப்பட்டு, மேலும் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

மூன்றாவது – போரை முன்னெடுத்துச் செல்ல மேலும் ஆள்சேர்ப்பு இராணுவத்தில் செய்யப்பட வேண்டும்.

அந்தக் காலங்களில் நடந்த ஆள்சேர்ப்புக்களின் மூலம் தாங்கள் படைகளில் எழுபது சதவீதம்

தொடர்ச்சி▼

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

தொடர்ச்சி▲

ஊடுருவி விட்டோம், அவர்கள் மிக விரைவில் தங்களோடு இணைவார்கள் என வீராப்பு பேசியவர்கள், இப்போது ஓரளவுக்கு 70 வீதம் இல்லாவிடினும் அவர்களது அங்கத்தினரும் இராணுவத்தின் அங்கமாக முள்ளிவாய்க்கால் படுகொலைகள் நடந்தன என்ற எண்ணத்திலாவது தமிழ் மக்களுக்கு அனுதாபத்தைத் தெரிவித்து இருக்கலாம். அநுரா தலைவராகிய நாள்களில் முள்ளிவாய்க்காலில் நடைபெற்ற படுகொலைகளை பற்றி சர்வதேசம் கண்டனங்கள் தெரிவித்து, ஐ.நாவின் செயலாளர் பான் கீ மூன் தமது நிபுணர் குழு மூலம் தருஸ்மன் அறிக்கையைப் பெற்றிருந்தார். இந்தச் சம்பவங்களுக்கு உந்து சக்தியின் தலைவராக இருந்தவருக்கு, சர்வதேசத்தின் ஆதங்கங்கள் தெரிந்திருக்காமல் இருக்க வாய்ப்பில்லை. கடைசியில் ஓரளவில் தனி மனிதனாகக் கூடத் தான் அந்த அவலங்களுக்காக வருந்தினேன் என்ற வார்த்தைகளைக் கூட அவர் உதிர்க்கவில்லை.

2015 ஆம் ஆண்டு தேர்தலில் மஹிந்தவுக்கு ஆதரவு தந்தமையும், அவரது அரசாங்கத்திற்கு எதிரான சர்வதேச சூழ்ச்சியினாலோ, மக்கள் அவரைக் கணக்கெடுத்ததாலோ, மஹிந்த வெற்றி பெறவில்லை. மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகி, ரணில் விக்கிரமசிங்க பிரதமரான நல்லாட்சி அரசாங்கம் பதவியேற்ற போது, அதற்கு ஆதரவு தராத நிலையில், பின்னணியில் மைத்திரிக்கும் ரணிலுக்கும் பேதங்கள் ஏற்படுத்தி, அந்த ஆட்சியை நிலைகுலைத்ததின் நோக்கம், அதிகார பரவலின் அடிப்படைகளில் இணக்கங்கள் ஏற்படக்கூடும் என்ற காரணங்களே முதன்மையானவை. இவற்றை எதிர்ப்பதற்காகத் தங்களது கட்சிக் கிளைகளின் ஊடாக பரப்புரைகள் செய்யப்பட்டாலும், ராஜபக்ஷ அரசின் ஊழல்களின் தன்மைகளிலும், நாட்டின் பொருளாதார மீட்புக்கு அவற்றின் பாதிப்பையும் கருதி 2019 இல் பல குழுக்களோடு சேர்ந்து தேசிய மக்கள் சக்தியை உருவாக்கினார்.

அந்த வருடத்திற்கான ஜனாதிபதித் தேர்தலுக்கு அநுரா வேட்பாளராக நிறுத்தப்பட்டார். 2014 இல் இருந்தே தனது கட்சிக்காக மன்னிப்பு தெரிவித்திருந்தும், மக்கள் அவரை நிராகரித்தனர். அந்தத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி ஆக மூன்று சத வீத வாக்குகளையே பெற்றது.

தேர்தலின் மூலம் சிங்கள – பௌத்த பேரினவாதத்திற்கு அரணாக நிற்பேன் என்ற வாக்குறுதிகளில் மீண்டும் மஹிந்தவின் அரசியல் சாணக்கியங்களில் கோட்டாபயவே ஜனாதிபதி ஆனார்.

2019 இல் ஜே.வி.பி. தோற்றுவித்த தேசிய மக்கள் சக்தியை அதனது ஐந்தாவது பரிமாணமாகக் கொள்ளலாம். வன்முறையை ஒறுத்து, அதற்குத் திரும்ப மாட்டோம் என்ற உறுதி கொடுத்து, நாட்டில் எல்லோரும் சமம், யாவரும் ஒன்றிணைந்து நாட்டைக் கட்டி எழுப்புவோம் என்ற கோரிக்கைகள் பரப்புரை செய்யப்பட்டன. தேசிய மக்கள் கட்சியின் கூட்டில் இருந்த இருபது குழுக்களும் மனித உரிமைகள், பொருளாதாரம், ஊடகங்களில் ஈடுபாடு கொண்ட புத்திஜீவிகளைக் கொண்டவையாயினும் அவர்கள் அரசியல் அனுபவம் கொண்டவர்கள் அல்லர். அதனை வெளியில் நின்று அவதானித்தவர்கள். நாடு போகின்ற திசையை மாற்ற அதன் அடிப்படைக் கலாச்சாரம் மாற வேண்டும் என்ற எண்ணப்பாங்கு கொண்டவர்கள். ஆகவே அரசியல் பரப்புரைகளுக்கான அங்கத்தினர்களும், கட்சிக் கிளைகளும், ஆள்பலமும் ஜே.வி.பியிடமே

இருந்தமையால், கொள்கைகளின் ஆக்கங்களில் அவர்களது தீர்மானமே நிறைவேறும் அதிகாரம்

தொடர்ச்சி▼



அறகலய போராட்டத்தில்....

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?



தொடர்ச்சி▲

இருந்தது. 'மாற்றம் தேவை' என்ற பிரசாரம் வலுப்பெற, கோட்டாவின் அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகளின் விளைவுகளாலும், கொவிட் தொற்று நோய் கட்டுப்பாட்டின் இன விரோத செயல்களாலும், மக்கள் கண்ணீரில் உப்பிட்டு கலயங்களைத் துளாவினாலும் அங்கே கஞ்சி கிடைக்கவில்லை.

மக்கள் பசியினாலும், அத்தியாவசிய சேவைகளுக்காக ஏங்கியமையாலும், அவர்கள் வீதிக்கு இறங்க ஆயத்தமானார்கள். ஜே.வி.பி. எப்படி 1987 இல் இந்திய ஒப்பந்தத்தில் அரசுக்கு எதிரான கிளர்ச்சியை உருவாக்கியதோ, அதேபோல மக்களின் இந்த வாழ்வாதாரத்தின் ஏக்கங்கள் உணர்ச்சிகளைத் தூண்டி, அவர்களின் பரிமாணம் அறகலயவாக உருவானது.

அந்தப் போராட்டத்தில் கோட்டாபயவின் திறனற்ற, அகங்கார, ஒற்றைப்போக்கு ஆட்சியின் தன்மையால் அறகலய போராட்டம் விரிவடைந்தது. சிவில் சமூக அமைப்புகள் எனப் பல களத்தில் பாய்ந்தன. முன்னணி சோசலிச கட்சி, சஜித் பிரேமதாஸவின் ஆசீர்வாதத்துடன் அவரது குழுக்கள், ரணிலின் ஐக்கிய தேசியக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்திய 'கறுப்பு மூடி இயக்கம்' என எவ்வளவோ இந்த வெள்ளப்பெருக்கோடு இணைந்தன. எல்லோருமே மாற்றம் வேண்டும் என்ற தாரக மந்திரத்தை அனுட்டானம் பண்ணினர். ஆட்சி ஆணவத்தில் ஆடிக்கொண்டிருந்த கோட்டாபயவையும், அவரது குடும்பத்தினரையும், அரசு அதிகாரங்களில் இருந்து பிடுங்கி எறிய வேண்டும் என்பதுதான் அவர்கள் அனைவரதும் கோரிக்கையாக இருந்தது.

ஆனால் அவர்களிடையே ஊரை அடித்து உலையில் போட்டோரும் இருந்தனர். ரணில் அறகலய போராட்டக்காரர்கள் யாவரையும் அடித்துத் தள்ளி, கோட்டாபயவிடம் ஆட்சியைப் பொறுப்பேற்று ஜனாதிபதியானார். கோட்டாவையும் பாதுகாத்து, மஹிந்தாவின் குடும்பத்தையும் பொறுப்பேற்று, காலிமுகத் திடலில் எல்லா சமூகங்களின் வலிகளின் உணர்வுகளில் ஓர் ஒற்றுமையான சமூகம் உருவாக வேண்டும் என வைக்கப்பட்ட பாதைகள் எல்லாம் அகற்றப்பட்டு, காலி முகத்திடல் ரணிலது ஆட்சியின் தொடக்கத்திலேயே நிர்வாணமாக நின்றது.

ரணிலின் இரண்டு வருட ஜனாதிபதி ஆட்சியில், தங்களது அத்தியாவசிய தேவைகளில் சில மாற்றங்களையும் பொருளாதாரத்தில் சில முன்னேற்றங்களையும் மக்கள் கண்டாலும், மாற்றம் தேவை என்ற உள்ளுணர்வில் இருந்த அவர்கள், ரணிலை அப்புறப்படுத்தி, தேசிய மக்கள் சக்தியை ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற வைத்து, வெற்றியின் பின் அவர்களது அரசாங்கத்தை மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் தேர்ந்தெடுத்தனர்.

மாற்றத்திற்கான மக்களின் கொதிப்பே ஒழிய, கொள்கைகள் அந்தத் தேர்தலில் முக்கியத்துவம் பெறவில்லை. அதனால் நாட்டின் பொருளாதாரத்தையே முறியடித்து வங்குரோத்தாக்கிய இனப் பிரச்சினையின் தீர்வுகள் பற்றி தேசுய மக்கள் சக்தியால் எதுவும் தெளிவாகப் பேசப்படவில்லை.

நாட்டில் இனப்பிரச்சினை என்ற ஒன்று இல்லை என்ற நிலைப்பாட்டில் புதிய சமுதாயத்தைக் கட்டி எழுப்புவோம் என்ற அறை கூவலுக்கு நல்லெண்ணமும் தங்களை நம்ப வேண்டும் என்ற வார்த்தைகளும் அத்திவாரங்கள் ஆயின. தமிழ்த் தலைவர்கள் கூட, வன்முறையற்ற, இனத்துவேஷத்தைத் தூண்டாத தேர்தல்களை நடத்தியமைக்கு அநுராவைப் பாராட்டினர். ஆனாலும் மே 18 நினைவு நாளில் தமிழ் மக்களின் அவல உணர்வுகளைக் கண்டும் ஜே.வி.பியினர் இனப்படுகொலை என ஒன்று நடக்க இனப் பிரச்சினையொன்று இருக்க வேண்டும், அப்படியான இனப் பிரச்சினை ஒன்று நாட்டில் இருக்கவில்லை என்ற பேராண்மையையே பேசுகிறார்கள்.

(தொடரும்)












# தம்பலகாமம் பொற்கேணிப் பகுதியிலும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நேற்று

திருகோணமலை தம்பலகாமம் பொற்கேணி பகுதியில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை ஒட்டி நினைவுக் கஞ்சி நேற்று மாலை வழங்கி வைக்கப்பட்டது.

இந்த நினைவேந்தல் நிகழ்வை அப்பகுதிப் பொது மக்கள் இணைந்து ஏற்பாடு செய்திருந்தனர்.

இறுதியுத்தத்தின்போது முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தவர்களை நினைவுகூர்ந்து ஒரு நிமிட மௌன அஞ்சலியும் உணர்வு பூர்வமாக இடம் பெற்றது.

இந்நிகழ்வில் இளைஞர்கள், காணாமற்போனோரின் உறவுகள், சமூகச் செயற்பாட்டாளர்களும் கலந்து கொண்டு தங்கள் துயர அனுபவங்களைப் பகிர்ந்தனர் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வாழ்வுகளைப் பற்றி பேசினர்.














# சங்குக் கூட்டணியின் ஏற்பாட்டில் நேற்று மட்டு.கல்லடியில் நினைவேந்தல் நிகழ்வு

(வாலகிருஸ்ணா)

இனஅழிப்பு வாரத்தின் இறுதி நாளான நேற்றைய தினம் மாலை ஜன நாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் (சங்குச் சின்னக் கூட்டணியின்) ஏற்பாட்டில் நினைவேந்தல் நிகழ்வு மட்டக்களப்பு கல்லடி கடற்கரையில் உணர்வுபூர்வமாக நடைபெற்றது.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் பொதுச்செயலாளரும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் பேச்சாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கோவிந்தன் கருணாகரம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கிழக்கு மாகாணசபையின் முன்னாள் பிரதித் தவிசாளர் பிரசன்னா இந்திரகுமார், முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரெட்னம் மற்றும் உள்ளூராட்சிமன்றங்களுக்கு தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்கள், கட்சி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், பொது மக்கள் என பெருமளவான மக்கள் கலந்துகொண்டனர்.

இதன்போது பிரதான சுடர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரினால் ஏற்றப்பட்டதை தொடர்ந்து அனைவரும் ஈகச் சுடர் ஏற்றி மலரஞ்சலி செலுத்தினர் ஆத்மசாந்தி பிரார்த்தனையும் நடைபெற்றது.

அதனை தொடர்ந்து கடலில் மலர் கொண்டு அஞ்சலி செய்யப்பட்டதுடன் விசேட நினைவேந்தல் உரையும் நடைபெற்றது.













# மக்களின் நீதிக்கான போராட்டத்தில் விட்டுக் கொடுப்புக்கு இடமளியோம்!

## சித்தாண்டியில் நடந்த நினைவேந்தலில் சாணக்கியன் திட்டவட்டம்

(வாலகிருஸ்ணா)

ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் கொல்லப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி பெற்று தருவோம் என்று சொல்லி வந்தவர்கள் இன்று மாறுபட்ட கருத்துடன் இருக்கின்றார்கள். கொல்லப்பட்டவர்களுக்காக – பாதிக்கப்பட்ட சமூகத்திற்காக – எப்பொழுதும் நேர்மையாக மக்களின் சார்பில் நின்று தமிழரசு கட்சி குரல் கொடுக்கும். மக்களுக்கான நீதி என்கின்ற விடயத்தில் நாங்கள் ஒருபோதும் விட்டுக் கொடுக்கப் போவதில்லை என இலங்ந்த் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

16 ஆவது ஆண்டு முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தை முன்னிட்டு இலங்கைத் தமிழரசு கட்சியின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு சித்தாண்டி பகுதியில் நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வில் முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சப்பட்டு, பொதுச்சுடர் தீபம் ஏறப்பட்டதனை தொடர்ந்து மலரஞ்சலி மற்றும் மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டு முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வும் நடைபெற்றது.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சாணக்கியன், இ.ஶ்ரீநாத், ஞா.ஶ்ரீநேசன் முன்னாள் பொதுச்செயலாளர் துரைராஜசிங்கம், கட்சியின் உறுப்பனர்கள், கிராம இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.





# திருமலை காளி கோவில் முன்றிலில் தமிழரசுக் கட்சியினர் நினைவேந்தல்

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை திருகோணமலை மாவட்ட தமிழரசுக் கட்சியின் இளைஞர் மற்றும் மகளிர் அணியினர் இணைந்து நேற்று மாலை 4 மணியளவில் திருகோணமலை காளி அம்மன் கோயில் முன்றிலில் நடாத்தினர்.

இதில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் மற்றும் கட்சியின் உள்ளூராட்சி மன்ற வேட்பாளர்கள், பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இறுதி யுத்தத்தின் போது இனப் படுகொலை செய்யப்பட்டவர்களை நினைவு கூர்ந்து முள்ளிவாய்க்கால் கஞ்சி நினைவேந்தல் இடம் பெற்றது.

# மன்னார் வளைகுடா பகுதிகளில் கடற்றொழிலில் ஈடுபட வேண்டாம்



எதிர்வரும் 21ஆம் திகதி வரை தென் தமிழக கடலோரப் பகுதிகள் மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் கடற்றொழிலில் ஈடுபட வேண்டாமென மீனவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த பகுதிகளில் மணித்தியாலத்திற்கு 45 முதல் 50 கிலோ மீற்றர் வேகத்திலும் இடைக்கிடையே 55 கிலோ மீற்றர் வேகத்திலும் பலத்த காற்று வீசக்கூடுமென இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அரபுக் கடற்பிராந்தியத்தில் எதிர்வரும் 22 ஆம் திகதி காற்றழுத்த தாழ்வு மண்டலம் உருவாகும் சாத்தியம் முள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 21 ஆம் திகதி வளிமண்டல மேலடுக்கு சுழற்சி உருவாகுமென வும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.









# தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் மகளிர் அமைப்பு மன்னாரில் நடத்திய முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

**(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)**

தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சியின் மன்னார் மாவட்ட மகளிர் அமைப்பினரால் ஏற்பாடு செய்யப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு, நேற்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை காலை10.30 மணியளவில் மன்னார் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் மகளிரணித் தலைவி லூக் ஷோபனா அலெக்சாண்டர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் மன்னார் மாவட்ட பொறுப்பாளர் துரைராசா ஜோன்சன், மன்னார் கலையருவி இயக்குனர் அருட்பணி லக்ஷன் அடிகளார், அருட்பணி அருட்பிரகாசம் அடிகளார், செல்வ நகர் ஸ்ரீமுத்துமாரியம்மன் கோயில் குருக்கள் பாபு சர்மா மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டு இறந்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தினர்.


















# மட்டக்களப்பு வாகரை முகத்துவாரம் கடற்கரையில் மக்கள் முன்னணியினர் முன்னெடுத்த நினைவேந்தல்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு வாகரை முகத்துவாரம் கடற்கரையில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஒழுங்குபடுத்தலில் தமிழ் இன அழிப்பின் 16 ஆவது நினைவேந்தல் நேற்று ஞாயிற்றுக்கிழமை தீபச் சுடர் ஏற்றி உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

இந்த நினைவேந்தல் வாகரை முகத்துவாரம் கடற்கரையில் அமைக்கப்பட்டுள்ள மீனவர் கட்டடத்தில் கட்சியில் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நினைவேந்தலில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சி தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் உட்படகட்சியின் உறுப்பினர்கள் மற்றும் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டு உயிர் நீத்தவர்களுக்கு தீபச் சுடர் ஏற்றி அனுஷ்டித்தனர்.















# தலைமன்னார் புனித லோறன்சியார் ஆலயத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நேற்று

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

தலைமன்னார் புனித லோறன்சியார் தேவாலய பிரதான வாயிலில் தலைமன்னார் பங்குத்தந்தை அருட்பணி டெனி கலிஸ்டஸ் மற்றும் திருக்குடும்ப கன்னியர் சபையின் அருட்சகோதரிகள் தலைமையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நேற்று இடம் பெற்றது.

இந்த நிகழ்வின் முதல் அம்சமாக இறுதி யுத்தத்தில் இறந்து போன மக்களை நினைத்து பங்குத்தந்தை பங்கு மக்கள் முன்னிலையில் சுடர் ஏற்றினார்.

அதனைத் தொடர்ந்து மக்கள் ஆலயத்தை நோக்கி பேரணியாக சென்று அங்கு வைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவு பாதையின் முன்னிலையில் மரியாதை செலுத்தி மலர் கொத்துக்களை அங்கு வைத்த பினர் மெழுகுவர்த்திகளை ஏற்றி இறந்து போன தம் உறவுகளுக்காக அஞ்சலி செலுத்தினர்.

அதனைத் தொடர்ந்து வழிபாடு இடம்பெற்றது.

இவ்வழிபாட்டில் முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பாக வாசிக்கப்பட்டமையுடன், இறந்து போன காணாமல் ஆக்கப்பட்ட மக்களுக்காக மன்றாட்டுக்களும் இறைவனிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

தொடர்ந்து ஆலயத்தின் பிரதான வாயிலில் வைத்து முள்ளிவாய்க்கால் கஞ்சி மன்னார் மறைமாவட்டத்தின் குரு முதல்வர் அருட்பணி கிறிஸ்து நேசரட்ணம் அடிகளாரினால் ஆசீர்வதிக்கப்பட்டு மக்களுக்கு வழங்கப்பட்டது.

இந் நிகழ்வில் மறைமாவட்ட குருக்களும் கலந்து கொண்டமையுடன், நிகழ்வை கத்தோலிக்க இளைஞர் ஒன்றிய உறுப்பினர்கள் சிறப்பாக ஒழுங்குபடுத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

















# தொப்புள்கொடி உறவுகளுக்கு நல்லுறவுகளாக இருப்போம்

## முள்ளிவாய்க்கால் நினைவு நாளில் விஜய் தெரிவிப்பு






உலகெங்கும் வசிக்கும் நம் தொப்புள்கொடி உறவுகளுக்கு, நம்பிக்கை ஊட்டும் நல்லுறவுகளாக நாம் இருப்போம் என்று முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தில் உறுதி ஏற்போம் என த.வெ.க. தலைவர் விஜய் தெரிவித்துள்ளார்.

தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பில் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவு தினம் தமிழகம் முழுவதும் அனுஷ்டிக்க நேற்று ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்நிலையில், தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் இது குறித்து தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

“உலகெங்கும் வசிக்கும் நம் தொப்புள்கொடி உறவுகளுக்கு, நம்பிக்கை ஊட்டும் நல்லுறவுகளாக நாம் இருப்போம் என்று முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தில் உறுதி ஏற்போம்.

மண்ணில் விதைக்கப்பட்ட நம் உறவுகளுக்கும், உலகிற் சிறந்த உயர்தனி வீரத்திற்கும் நினைவஞ்சலியும் வீர வணக்கமும். மாமக்கள் போற்றுதும், மாவீரம் போற்றுதும்.” எனப் பதிவிட்டுள்ளார்.

# ஆளில்லாத போலி போர் விமானங்கள் மூலம் பாகிஸ்தானை ஏமாற்றியது இந்திய இராணுவம்



ஒபரேஷன் சிந்தூர் இராணுவ நடவடிக்கையின்போது ஆளில்லாத போலி போர் விமானங்கள் மூலம் பாகிஸ்தான் இராணுவத்தை இந்திய இராணுவம் எளிதாக ஏமாற்றியுள்ளது.

பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்கு பதிலடியாக, ஒபரேஷன் சிந்தூர் என்ற பெயரில் கடந்த 7 ஆம் திகதி பாகிஸ்தானின் 9 தீவிரவாத முகாம்களை இந்திய விமானப்படை அழித்தது. இதன்பிறகு கடந்த 7,8, 9, 10 ஆகிய திகதிகளில் இந்தியா, பாகிஸ்தான் இடையே மிகப்பெரிய போர் நடைபெற்றது.

கடந்த 9 ஆம் திகதி நள்ளிரவில் பாகிஸ்தானின் 11 விமானப் படைதளங்களை, இந்திய போர் விமானங்கள் பிரம்மோஸ், ஸ்கால்ப் உள்ளிட்ட ஏவுகணைகள் மூலம் அழித்தன. இந்த தாக்குதல் குறித்து இந்திய பாதுகாப்புத் துறை வட்டாரங்கள் தெரிவிக்கையில்,

“பாகிஸ்தானின் ட்ரோன், போர் விமானங்களின் தாக்குதலை முறியடிக்க அந்த நாட்டின் விமான படைதளங்களை அழிக்க முடிவு செய்யப்பட்டது. இதற்காக கடந்த 9 ஆம் திகதி நள்ளிரவில் லட்சியா என்ற ஆளில்லா ட்ரோன்கள் பாகிஸ்தான் விமான படைதளங்கள் மீது பறக்க விடப்பட்டன.

இந்த ட்ரோன்கள் சுகோய், மிக் 29 ரக போர் விமானங்கள் போன்று தத்ரூபமாக தயார் செய்யப்பட்டு இருந்தன. இவை உண்மையான போர் விமானங்கள் என்று நம்பிய பாகிஸ்தான் விமானப்படை அனைத்து வான் பாதுகாப்பு கவசங்களையும் ஒரே நேரத்தில் இயக்கியது.

லட்சியா ட்ரோன்களை குறிவைத்து பாகிஸ்தான் இராணுவமும் விமானப் படையும் இணைந்து தரை, வான் வழியாக பல்வேறு ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தின. ஆனால் மணிக்கு 850 கிலோ மீற்றர் வேகத்தில் பறக்கும் திறன்கொண்ட லட்சியா ட்ரோன்களை பாகிஸ்தான் விமானப் படையால் சுட்டு வீழ்த்த முடியவில்லை. இந்தியாவின் போலி போர் விமானங்களுடன் பாகிஸ்தான் போர் விமானங்கள் மிக தீவிரமாக போரிட்டு கொண்டிருந்தன. அந்த நாட்டு இராணுவம் மற்றும் விமானப் படையின் முழு கவனமும் லட்சியா ட்ரோன்கள் மீது இருந்தன.

இந்த நேரத்தில் இந்திய எல்லைப் பகுதிகளில் இருந்து சுகோய், ரஃபேல் போர் விமானங்கள் பாகிஸ்தான் விமான படைத் தளங்களை குறிவைத்து சக்திவாய்ந்த ஏவுகணைகளை வீசின.

சுகோய் போர் விமானங்களில் இருந்து அடுத்தடுத்து சீறிப் பாய்ந்த 15 பிரம்மோஸ் ஏவுகணைகள் பாகிஸ்தான் விமான படை தளங்களை துல்லியமாக தாக்கி அழித்தன. இதேபோல ரஃபேல் போர் விமானங்களில் இருந்து சீறிப் பாய்ந்த ஸ்கால்ப் ஏவுகணைகள் பாகிஸ்தான் விமான படை தளங்களை துவம்சம் செய்தன.

இதில் பாகிஸ்தானின் 11 விமான படை தளங்கள் மிகக் கடுமையாக சேதமடைந்தன. ஏராளமான போர் விமானங்கள் அழிந்தன. ஓடுதளங்களில் ராட்சத பள்ளங்கள் ஏற்பட்டதால் எந்தவொரு போர் விமானத்தையும் இயக்க முடியாத சூழல் எழுந்தது.

மேலும் லட்சியா ட்ரோன்கள் மூலம் பாகிஸ்தானின் வான் பாதுகாப்பு கவசங்கள் எந்தெந்த இடங்களில் உள்ளன என்பது மிகத் துல்லியமாக கண்டறியப்பட்டது. இதன்மூலம் அந்த நாட்டின் எச்கியூ-9 என்ற வான் பாதுகாப்பு கவசங்களும் முழுமையாக அழிக்கப்பட்டன.” என்று தெரிவித்தன.



# காஸா மீது இஸ்ரேல் மேற்கொண்ட வான் தாக்குதலில் 72 பேர் பலி

காஸா மீது நேற்று இஸ்ரேல் நடத்திய வான் வழித் தாக்குதல்களில் சுமார் 72 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

காஸா போர் நிறுத்த பேச்சுவார்த்தைகள் நேற்று முன்தினம் முதல் மீண்டும் ஆரம்பமாகியுள்ள நிலையில், இந்த தாக்குதல் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதேநேரம், போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கும், இஸ்ரேல் முற்றுகையிட்டுள்ள காஸா பகுதிகளிலுள்ள மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கும், அரபு நாடுகளின் தலைவர்கள் அழைப்பு விடுத்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

# பின்லாந்தில் ஹெலிக்கொப்டர் விபத்தில் 5 பேர் உயிரிழப்பு





பின்லாந்தின் யூரா விமான நிலையத்திற்கு அருகில் 2 ஹெலிக்கொப்டர்கள் விபத்துக்குள்ளாகியுள்ளன.

இந்த விபத்தில் 5 பேர் உயிரிழந்துள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

விபத்துக்குள்ளான இரண்டு ஹெலிக்கொப்டர்களில் ஒன்று எஸ்டோனியாவிலும் மற்றொன்று ஆஸ்திரியாவிலும் பதிவு செய்யப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணைகளை அந்நாட்டு அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

# மேலும் பல பணயக்கைதிகளை விடுவிப்பதற்கு ஹமாஸ் ஒப்புதல்

நேற்று முன்தினம் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளுக்குப் பின்னர், புதிய காசா போர் நிறுத்த ஒப்பந்தத்தின் கீழ் மேலும் பல பணயக்கைதிகளை விடுவிப்பதற்கு ஹமாஸ் முன்மொழிந்துள்ளது.

இஸ்ரேல் இராணுவம் காசா பகுதியில் பாரிய தாக்குதலொன்றை ஆரம்பித்த சில மணி நேரங்களுக்குப் பின்னர் புதிய பேச்சுவார்த்தை தொடங்கியது.

60 நாள்கள் போர் நிறுத்தம் மற்றும் இஸ்ரேல் – பாலஸ்தீன கைதிகளை விடுவிப்பதற்கு ஈடாக ஒன்பது பணயக் கைதிகளை விடுவிக்க ஹமாஸ் ஒப்புக் கொண்டதாகப் பாலஸ்தீன அதிகாரி ஒருவர் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

புதிய முன்மொழியப்பட்ட ஒப்பந்தம், நாளொன்றில் உதவி பொருட்கள் அடங்கிய 400 பாரவூர்திகள் காசாவுக்குள் நுழையவும், காசாவிலிருந்து நோயாளர்களை வெளியேற்றவும் அனுமதிக்கும் என அந்த அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய, இஸ்ரேல், மீதமுள்ள அனைத்து பணயக்கைதிகள் பற்றிய விரிவான தகவல்களையும் கோரியுள்ளது.

புதிய சுற்றுப் போர் நிறுத்த பேச்சுவார்த்தைகள் டோஹாவில் கட்டார் மற்றும் அமெரிக்க மத்தியஸ்தர்கள் மூலம் நேற்று பிற்பகல் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

முன்மொழியப்பட்ட ஒப்பந்தம் குறித்து இஸ்ரேல் இன்னும் பகிரங்கமாகப் பதிலளிக்கவில்லை எனினும், பேச்சுவார்த்தைக்கு முன்பாக காசாவிலிருந்து துருப்புக்களை மீளப் பெறவோ அல்லது போரை முடிவுக்குக் கொண்டுவரவோ உறுதியளிக்காது எனக் கூறியிருந்தது.

# இன்றைய ராசி பலன்கள் - 19.05.2025




இன்றைய நாளை சாதகமாக்கிக் கொள்ள நீங்கள் மிகவும் முயற்சி எடுப்பீர்கள். உங்கள் மனது அமைதியாக இருக்கும். உங்கள் இலக்கில் கவனம் செலுத்த இயலும்.

பணிநிமித்தமான பயணங்கள் ஏற்படும். உங்கள் பொறுப்புகளை முறையாக ஆற்றுவீர்கள்.

நல்ல சுமுகமான உறவுமுறை காணப்படும். உறவுப் பிணைப்பின் மதிப்பை நீங்கள் உணர்வீர்கள்.

குடும்பத்தில் விசேஷங்கள் நடக்க வாய்ப்பு உள்ளது. அதற்காக பணத்தை செலவு செய்வீர்கள். அது உங்களுக்கு மகிழ்ச்சியைத் தரும்.

உங்கள் அமைதியான மனநிலை காரணமாக மிகவும் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.




ஒரு சாதகமான நாள் உங்கள் முன் இருக்கின்றது. இன்று அமைதியான மனநிலையுடன் காணப்படுவதால் முக்கிய முடிவுகள் எடுப்பதற்கு உகந்த நாள். இன்று மாற்றங்கள் ஏற்படலாம். அது உங்களுக்கு நன்மையை அளிக்கும்.

இன்று பணிச்சுமை உங்களுக்கு மனஅழுத்தத்தை உண்டாக்கும். உங்கள் பணியின் தரம் குறைவாக இருக்கும்.

குடும்பத்தில் நல்லுறவு காணப்படும். குடும்பத்தாருடன் இனிமையாகப் பேசி பழகுவீர்கள்.

பணம் அதிகமாக காணப்படும். பயனுள்ள நோக்கங்களுக்காக பணத்தை செலவு செய்வீர்கள்.

மகிழ்ச்சியான மனநிலை உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.தியானம் மேற்கொள்வது உங்களுக்கு மிகவும் நல்லது.




இன்று சௌகரியங்கள் குறைந்து காணப்படும். இன்று சில பொறுப்புகளை உங்களால் செய்ய முடியாமல் போகலாம்.

நீங்கள் பணியில் பிரகாசிப்பீர்கள். உங்கள் பணி உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உணர்ச்சிவசப்படுவதன் காரணமாக தேவையற்ற வாக்குவாதங்கள் ஏற்பட வாய்ப்பிருக்கும். எனவே நல்லுறவை தக்க வைக்க கவனமாக இருக்க வேண்டும்.

பணஇழப்புக்கு வாய்ப்பிருப்பதால் பணத்தைக் கவனமாகக் கையாள வேண்டும்.

உங்கள் ஆரோக்கியத்தில் கவனமாக இருங்கள். தொண்டை வலி அல்லது கண்களில் எரிச்சல் ஏற்படலாம்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். நீங்கள் உங்கள் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள்.

உங்கள் பணிகளில் தாமதம் ஏற்படும். பணிகள் சுமுகமாக நடைபெற நீங்கள் மிகுந்த கவனத்துடன் செயல்பட வேண்டும்.

குடும்ப வட்டாரத்தில் அமைதியும் மகிழ்ச்சியும் காணப்படும். விருந்தினர்களின் வருகை உற்சாகத்தைத் தரும்.

இன்று பணத்தை சேமிப்பதற்கும் முக்கியமான முடிவுகள் எடுப்பதற்கும் உகந்த நாள். ஸ்திரமான நாளாக அமையும்.

இன்றைய நாள் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும். நீங்கள் ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.




இன்று அர்ப்பணிப்புடன் செயல்படுவீர்கள் உங்கள் நலன் பெருகும். இன்று பயணங்கள் காணப்படும்.

இன்று பணிச்சூழல் நன்றாக இருக்கும். மேலதிகாரிகள் உங்கள் திறமைகளை மதிப்பிடுவார்கள்.

இன்றைய தினம் காதலுக்கு உகந்த நாள் அல்ல. நீங்கள் மகிழ்ச்சியைத் தேடுவீர்கள்.

இன்று பண இழப்புக்கு வாய்ப்பு உள்ளது. அதனால் சில ஏமாற்றங்களை சந்திக்க நேரும். எனவே கவனமாக இருக்க வேண்டும்.

இன்று ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும். சளி இருமல் போன்ற உபாதைகளுக்கு ஆளாக நேரலாம்.




இன்று உங்கள் எண்ணங்கள் ஈடேறும். இன்று அதிர்ஷ்டங்களை சந்திப்பீர்கள்.

பணியின் மீதான உங்கள் அர்ப்பணிப்பு காரணமாக உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள். உங்களின் சிறந்த பணி காரணமாக பதவி உயர்வுக்கான வாய்ப்பு உள்ளது.

பெரியவர்களிடமிருந்து இன்று அறிவுரை ஒன்றை கேட்க நேரும். நல்லுறவுக்கு அது பயனளிக்கும். குடும்பம் மகிழ்ச்சியாக இருக்கும்.

இன்று நிதி வளர்ச்சி அபாரமாக இருக்கும். ஆன்மீக நோக்கங்களுக்காக பணத்தை செலவு செய்வீர்கள்.

ஆரோக்கியம் மிகச் சிறப்பாக இருக்கும்.




இன்று உங்கள் செயல்களில் கவனம் தேவை.

உங்கள் சகபணியாளர்கள் மற்றும் கீழ்ப் பணி புரிபவர்களின் ஆதரவு உங்களுக்கு நம்பிக்கை அளிக்கும் மற்றும் நற்பெயர் கிடைக்கும்.

குடும்ப அங்கத்தினர்களிடம் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்த வேண்டும். மோதல்களுக்கு வாய்ப்பு உள்ளது.

பணத்தை கையாள்வதில் கவனம் தேவை. அலட்சியமாக இருந்தால் பணஇழப்பு ஏற்படும்.

ஆரோக்கியம் குறைந்து காணப்படும். உங்கள் உணவில் கவனம் செலுத்துங்கள். குளிர்ச்சியான உணவுகளைத் தவிர்த்துவிடுங்கள்.




இன்றையநாள் சமநிலையுடன் காணப்படும். உங்கள் அணுகுமுறை மூலம் நீங்கள் புதிய தொடர்புகளை பெறுவீர்கள்.

இன்றை பணியின் மூலம் நீங்கள் நற்பலன்களைப் பெறுவீர்கள். இது உங்கள் தகுதியை நிரூபித்துக் காட்டும்.

உறவில் அமைதியும் மகிழ்ச்சியும் காணப்படும். நண்பர்கள் உங்களுக்கு நல்லாதரவு தருவார்கள்.

இன்று நிதிவளர்ச்சி நன்றாக இருக்கும். உங்கள் நண்பர்களின் பிறந்த நாள் போன்ற விசேஷங்களுக்காக பணத்தை செலவு செய்வீர்கள்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் திருப்தியாகவும் சந்தோஷமாகவும் காணப்படுவீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 19.05.2025




இன்றைய நாளில் எதிர்பாராத மாற்றங்கள நிகழும். முயற்சிகளை சார்ந்து செயல்படுவது நல்லது.

பணியிடத்தில் நற்பெயரைப்பெறுவீர்கள். விரும்பி பணியாற்றுவீர்கள்.

குடும்பத்தாருடன் நல்லுறவு பராமரிப்பதற்கு உகந்த நாள். காதல் ஜோடிகள் இன்று பரஸ்பர ஒற்றுமையுடன் இருப்பார்கள்.

எதிர்பாராத வகையில் பணவரவு காணப்படும். பூர்வீகச் சொத்து, காப்பீடு அல்லது லாட்டரி மூலம் பணம் கிடைக்கலாம்.

இன்றைய நாள் நல்ல ஆரோக்கியத்தை நீங்கள் அனுபவிப்பதற்கு உதவியாக இருக்கும். நீங்கள் கவனிக்க வேண்டிய ஒரே விஷயம் நீங்கள் உண்ணும் உணவு முறைகள்.




திறமையான முறையில் செயலாற்ற உங்களுக்கு பொறுமையும் உறுதியும் தேவை.

பணி செய்வதற்கான திறமை உங்களிடம் காணப்படும் போதிலும் சிறந்த திட்டமிடல் இல்லாத காரணத்தால் அதனை நீங்கள் வெளிப்படுத்த இயலாது. எனவே கவனமாக பணியாற்ற வேண்டும்.

குடும்பத்துடன் அனுசரித்துச் செல்ல வேண்டியது அவசியம்.குடும்பத்தின் அமைதி சூழலை கெடுக்கும் வகையில் வாக்குவாதம் ஏற்பட வாய்ப்புள்ளது.

பண இழப்புக்கான வாய்ப்பு உள்ளது. உங்கள் குடும்ப உறுப்பினர்களின் உடல் நலத்துக்காகப் பணத்தைச் செலவு செய்ய நேரலாம்.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும். உடல் நலத்தில் நீங்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.




இன்று அன்பும் ஆர்வமும் நிறைந்திருக்கும். நல்ல பாடல்களைக் கேட்டு மகிழுங்கள். விளையாட்டில் நேரத்தை கழியுங்கள்.

பணியிடச் சூழல் சுமுகமாக இருக்காது. அனுசரித்து நடந்து கொண்டால் உங்கள் பணிகள் பாதிக்காது.

காதலுக்கு உகந்த நாள்.காதல் ஜோடிகள் உறவில் ஒற்றுமை கண்டு மகிழ்வார்கள்.

நிதி விஷயங்களில் வளர்ச்சி காணப்படும்.பங்குச் சந்தையில் பணத்தை முதலீடு செய்வதன் மூலம் நல்ல லாபம் பெறுவீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறந்து காணப்படும். ஆரோக்கியக் குறைபாடுகள் காணப்படாது.




இன்றைய நாள் உங்களுக்குச் சாதகமாக இருக்கும். சுய வளர்ச்சிக்காக தொடர்ந்து முயன்றால் இன்று வெற்றிகரமான நாளாக ஆக்கலாம்.

பணியில் பலன்கள் கலந்து காணப்படும். ஏற்ற இறக்கங்கள் காணப்படும். மேலதிகாரிகள் மற்றும் சகபணியாளர்களுடன் உறவாடும் பொழுது கவனமுடன் இருக்க வேண்டும்.

குழந்தைகளின் முன்னேற்றமும் வளர்ச்சியும் உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும். உடன்பிறந்தோரின் ஆதரவு கிடைப்பதற்கு சாத்தியம் உள்ளது.

இன்று நிதிவளர்ச்சிக்கு உகந்த நாள். இன்று நிதி சம்பந்தமாக முக்கியமான முடிவுகளை எடுப்பது பயனுள்ளதாக இருக்கும்.



# ரயில் சேவைகள் வழமைக்கு திரும்பின

வழமையான நேர அட்டவணையின் பிரகாரம் ரயில் சேவைகள் முன்னெடுக்கப்படுமென ரயில்வே கட்டுப்பாட்டு நிலையம் தெரிவித்துள்ளது.

ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் ஆரம்பித்த ஒருநாள் பணிப்பகிஷ்கரிப்பு நேற்று முன்தினம் நள்ளிரவுடன் நிறைவடைந்த நிலையில், ரயில் சேவைகள் வழமைக்கு திரும்பியுள்ளன.

நேற்று ரயில் நிலைய அதிபர்களும் ரயில் கட்டுப்பாட்டாளர்களும் கடமைக்கு சமுகமளித்தனர் என ரயில் நிலைய அதிபர்களின் சங்கத்தின் தலைவர் சுமேத சோமரத்ன தெரிவித்துள்ளார்.

தமக்கான தொழில்சார் பிரச்சினைகள் தொடர்பில் இன்று மீண்டும் கலந்துரையாடலில் ஈடுபட்டு அடுத்தகட்ட தொழிற்சங்க நடவடிக்கைகள் தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடைமுறையில் உள்ள பல பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குமாறு வலியுறுத்தி ரயில் நிலைய அதிபர்களினால் பணிப்பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும் சுமார் 90 ரயில் சேவைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.